## நிகழ்வும் நினைவும்.

இதேபோல் சிறீலங்கா படைத் தலைமைகளிடையே இன்று ஏற்பட்டுள்ள பிளவு நிலை இராணுவ ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சாதகமான நிலையினைத் தோற்றுவிக்கலாம். ஒருங்கிணைக்கப்பட்ட மூலோபாயமும் தந்திரோபாயமும் இன்றி சிறீலங்கா இராணுவ இயந்திரம் தனது இயங்குதிறனை அதிகரிக்கமுடியாது. மாறாக இன்று ஏற்பட்டுள்ள பிளவுநிலை இராணுவத்தின் இயங்குதிறனிலும் மனோபலத்திலும் பலத்த வீழ்ச்சியினை ஏற்படுத்தும். இராணுவத்தினை விட்டுத் தப்பியோடுவோர் தொகை அதிகரிக்கும். இராணுவத்திற்குப் புதிதாகச் சேர முன்வருவோர் தொகை மேலும் வீழ்ச்சியடையும். மனோபலம் குன்றிய, செயலாக்கம் அற்ற இராணுவம் எத்தகைய நவீன ஆயுதங்களைத் தம்மகத்தே வைத்திருந்தாலும் அது பயன்தரப் போவதில்லை. மாறாக போராளிகளை ஆயுதமயப்படுத்தவே அவ்வாயுதங்கள் பயன்படும். அதாவது சிறீலங்கா ஆயுதப் படையிடம் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றும் ஆயுதங்களின் தொகை, எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும்.

எந்தவொரு போராட்டமும் அரசியல், இராணுவ, இராஜதந்திர நகர்வுகளை உரியமுறையில், உரிய காலத்தில் மேற்கொள்ளும் போது வெற்றியடைவதற்குரிய சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றது. இன்று 'அரசியல்' பேசும் பலர் ஒரு போராட்டத்தில் இராணுவ வெற்றிகளின் முக்கியத்துவத்தினைக் குறைத்து மதிப்பீடு செய்வதனைக் காண முடிகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களுடைய போராட்டம் எப்படியும் வெற்றி பெறும் எனக்கூறும் இவர்கள் இராணுவ ரீதியில் கிடைக்கும் வெற்றிகளும் தோல்விகளும் அரசியல் இலக்கில் ஏற்படுத்தும் தாக்கத்தினை 'கவனிக்காமல்' இருந்துவிடுகின்றனர். இதனால் பல அரசியல் விமர்சகர்கள் சிறீலங்கா அரசபடைத் தலைமைக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளையும் கவனிக்காமல் இருக்கலாம்.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிசமைக்கக் கூடிய மாற்றங்களை, இன்றைய படைத் தளபதிகளுக்கிடையிலான பிளவு நிலை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■

### அளவெட்டி பிரசவ விடுதி மூடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக அளவெட்டி அரசாங்க பிரசவ விடுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
இங்கு கடமையாற்றிய பெண் ஊழியர்கள் வேறு வைத்திய சாலைகளுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பிரசவ விடுதி மூடப்பட்டுள்ளபோதும் அளவெட்டி மத்திய மருந்துச் சாலை தொடர்ந்து அங்கு செயற்பட்டு வருகின்றது.

## கிழக்கில் 250 ஆலயங்கள் வன்செயல்களால் சேதம்

கிழக்கு மாகாணத்தில் 444 இந்து ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றில் 250 க்கும் மேற்பட்டவை சமீபகால வன்செயல்களின்போது சேதமடைந்துள்ளன. 325 க்கு மேற்பட்ட ஆலயங்கள் கடந்த இரண்டு வருடங்களாக பூஜை வழிபாடு இன்றிக் கிடக்கின்றன.

இலங்கையில் உள்ள இந்து ஆலயங்கள் தொடர்பாக இந்து கலாச்சார இராஜாங்க அமைச்சு நடாத்திய ஆய்வில் இருந்து இத்தகவல் வெளியாகி உள்ளது.

வட மாகாணத்தில் 570ஆலயங்கள் உண்டு. இவற்றில் பெரும்பாலானவை மக்கள் இல்லாத காரணத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மூடிக்கிடக்கின்றன என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## விழுதுகள்...

"உது சந்தியாவால்தான் முடியும்" என்று வியந்தார்கள்.

தனது செயலிழந்த ஆயுதத்தைத் தனது ஆயுத உதவியாளரிடம் ஒப்படைத்துவிட்டு, அவரது ஆயுதத்தை எடுத்துக் கொண்டு, மீண்டும் சென்று மோதினாள். இந்நிலையில் தான், சந்தியா வயிற்றில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறாள்.

வைத்தியசாலையில் காயப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்ட எமது போராளிகள் சத்திரசிகிச்சை முடிந்த நிலையில், மயக்கம் முற்றாகத் தெளியாத நிலையில், களத்தில் நின்ற மனவேகம் குறையாது தன்னிலையில் கத்திக்கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு போராளியினதும்இதயதாகத்தை -உயிர் மூச்சை- இந்நிலையில் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

மயக்க நிலையில் சந்தியா கத்திக்கொண்டிருந்தாள்: "அண்ணை என்னை விடண்ணை. நான் கரும்புலியாகப் போகப்போறன். என்னை விடண்ணை" என்று, இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தாள்.

இந்த மனோபாவமும் வேகமும் தியாக உணர்வும்தான், இன்று எங்களது விடுதலைப் போரை உலக அரங்கிற்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

வைத்தியசாலையில் இவள் இதனைத்தவிர வேறெந்த நிலையிலும் கவலைப்பட்டதே கிடையாது. "எனக்கு இதுவும் ஒரு காயமா" என்றபடி, ஏனைய காயமடைந்த போராளிகளின் தேவைகளைக் கவனிப்பதில் ஈடுபடுவாள்.

மீண்டும் பல முனைகளிலும் சிறீலங்கா இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. எமது வீரர்களும் எதிரியை அழிக்காது விடமாட்டோம் என்ற ஆவேசத்துடன் நின்றனர். எதிரியை ஒரு அங்குலமேனும் நகரவிடமாட்டோம் என்ற ஆவேசத்துடன், கோட்டையில் சந்தியாவின் குழு.. மண்டைதீவு இராணுவம் கோட்டையை நோக்கித் தாக்குதல் தொடுக்கும் நேரங்களில் எல்லாம் சந்தியாவைத் தேடி மக்கள் படை வந்து சேரும். சந்தியாக்கா எப்படி இருக்கிறா என்று பார்த்துப் போனால்தான் அவர்கள் மனம் ஆறுதலடையும். அங்கே ... போனவர்கள் புளகித்துப்போய் நிற்பார்கள். அவளின் அன்பான வார்த்தைகளால் நிறைவடைந்து மீண்டும் செல்வார்கள். அந்தளவு தூரத்திற்கு இவள் நேசித்த மக்கள் இவளை நேசித்தார்கள். தான் நேசித்த இந்தத் தேசிய விடியலுக்காக, எங்கள் சந்தியா தன்னை அர்ப்பணித்து விட்டாள்.

*18. 06. 1992* அதிகாலை 5. 40 மணி, மண்டைதீவு இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது மேற்கொள்ளப்பட்ட 'செல்' தாக்குதலில், கப்டன் சந்தியா வீரச்சாவைத் தழுவிக்கொண்டுவிட்டாள். எந்த மண்ணை நேசித்தாளோ அந்த மண்ணணின் விடிவுக்கான வித்துக்களைத் தூவிவிட்டுச் சென்றுவிட்டாள்.

ஆம்! தன்னுடைய முதல் நன்மைக் கொண்டாட்டத்தின் போது சந்தியாக்காவிடம்தான் நான் கைவிசேடம் வாங்குவேன் என்று ஆசையுடன் காத்திருந்த...... கோட்டை வாசலில் ஏக்கம் ததும்பிய விழிகளுடன் சந்தியாவைத் தேடி நிற்கின்ற ஒன்பது வயதுச் சிறுவன் ஜோனைப் பார்க்கின்றேன்... எம்மண் விடுவிக்கப்படும்வரை போராட்டம் தொடரும் என்பதன் சாட்சியாய். ■

**- ஜெயா -**

## சின்னப் பூக்களு...

அண்ணாவை ஒண்டுஞ் செய்யாதேங்கோ.." என்று கத்தத் தொடங்கிவிட்டாள். இதனைச் சிறிதும் எதிர்பாராத அகிலன் மீராவைத் தூக்கியபடி முற்றத்தில் எழுந்து நின்றான்.

அகிலனின் இடுப்பில் பிஸ்டல் இருப்பது மீராவுக்குத் தெரியும். அதனால்தானோ என்னவோ தனது இரண்டு கால்களையும் அவனது இடுப்பைச் சுற்றி போட்டபடி இராணுவத்தினரை நெருங்கவிடாது பெரிய சத்தத்தில் கத்தினாள்.

இராணுவத்திற்குப் பெரிய சங்கடமாகிவிட்டது. மீராவின் தாயைப் பார்த்து "யார் இது?" என்றான். "எனது மூத்த பிள்ளை" என்றபடி அவளும் அழத்தொடங்கினாள்.

"டேய் உன்டை பேர் என்ன?" இராணுவத்தலைவன் அகிலனைப் பார்த்து உறுமினான். அகிலன் எதுவும் யோசிக்காமலேயே எடுத்த எடுப்பில் "வரதன்" என்று மீராவின் தமையனின் பெயரையே கூறினான்.

"ஐடின்டிக் காட் இருக்கா?"

"ஓம்"

"எங்கை? எடு!"

அகிலன் செய்வதறியாது ராசலிங்கத்தைப் பார்த்தான்.

மீரா கத்தினாள்: "அம்மா அண்ணாண்டை ஐடெண்டிக் காட்டைக் கொண்டா". குளிக்கும் சந்தர்ப்பங்களில் தமையன் ஐடெண்டிக் காட் வைக்கும் இடத்தையும் தாய்க்குக் கூறினாள். அகிலனோ அடுத்த கணம் நிகழப் போகும் பயங்கரங்களை நினைத்தபடி, அசையாது நின்றான்.

மீராவின் தாய் கமலாவிற்கோ மகனின் ஐடெண்டிக் காட் உள்ளே இருக்கும் என்பதில் துளிகூட நம்பிக்கை இல்லை. ஆனாலும் இருக்கவேண்டுமென உலகிலுள்ள தெய்வங்கள் அனைத்தையும் பிரார்த்தித்தபடி உள்ளே சென்றாள்.

ராசலிங்கத்தின் உள்ளம் மனைவி ஐடெண்டிக் காட்டோடு வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டது. மீரா அகிலனின் தோளில் படுத்திருந்தபடி விக்கலெடுத்துப் பலமாக அழுதுகொண்டிருந்தாள். அகிலனும் அவள் இறங்கிவிடக் கூடாது என்ற அங்கலாய்ப்போடு அவளை இறுகப் பற்றிக் கொண்டிருந்தான்.

நின்று கொண்டிருந்த இராணுவத்தினர் ஆளுக்கொரு பக்கமாக திண்ணையில் உட்கார்ந்தனர். நாய் குரைத்துக் கொண்டே இருந்தது. ஒருவன் அகிலனையும் உட்காரும்படி சைகை செய்தான். அகிலன் அவனுக்குச் சற்றுத் தள்ளி திண்ணையில் ஓரமாக உட்கார்ந்தான். ராசலிங்கமும் அமர்ந்தான்.

யார் செய்த புண்ணியமோ அகிலனின் ஆயுள் செய்த அதிஸ்டமோ, வரதனின் ஐடெண்டிக் காட் அன்று வீட்டிலேயே இருந்தது. மீராவின் தாய் ஐடெண்டிக் காட்டை இராணுவத்திடம் கொடுத்தாள்.

ஐடெண்டிக் காட்டை வாங்கியவன்அகிலனையும் படத்தையும் உற்று உற்றுப் பார்த்தான். மற்றையவர்களுக்கும் காட்டினான். தமக்குள் ஏதோ பேசிவிட்டுத் திடீரென்று "யார் இது?" என்று படத்தைக் காட்டி அகிலனிடம் கேட்டான்.

"நான்தான் சேர்" அகிலன் பதில் சொன்னான். அவனோ நம்பாமல் மீண்டும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அகிலனின் இதயம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. படத்திலிருப்பது மகன்தான் என்று அகிலனைக் குறிப்பிட்டபடி, மீராவின் தாய் அழுதாள். ஐடெண்டிக் காட்டிலுள்ள வரதனின் படத்திற்கும் தற்போதைய அகிலனின் உருவத்திற்கும் வேறுபாடு குறைவுதான். ஆனாலும் அடுத்த கணம் ஏது நிகழுமோ என இதயங்கள் அஞ்சித் தவித்தன.

ஐடெண்டிக் காட்டை வைத்திருந்தவன் அதனை அகிலனிடம் கொடுத்தான்.

"உனக்கு அகிலனைத் தெரியுமா?" என்றான்.

"தெரியாது சேர்"

"என்னடா தெரியாது. அவன் ஒவ்வொரு நாளும் இரவிலஇஞ்சை வந்திட்டுப் போறவனாம். பொய் சொன்னியெண்டா உன்னைக் கொண்டே உரிச்சுப் போடுவம்".
"ஐயோ என்டை அண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ... என்டை அண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ... - என்டை அண்ணாவை நான் விடமாட்டேன்.... நான் விடமாட்டன். அம்மா, அண்ணாவைக் கொண்டுபோகவேண்டாம் எண்டு சொல்லு". மீரா முன்னரைப் போல மீண்டும் கத்தி அழுதாள்.

"ஐயோ அந்தப் பெடியனைச் சத்தியமா எங்களுக்குத் தெரியாதையா. உங்கினை சனம் பறயக் கேள்விப்பட்டிருக்கிறம்தான். ஆனா நாங்களெண்டா ஒருநாளும் கண்ணாலை காணேல்லை. எங்களை ஆத்திரப்பட்டாக்கும் யாரோ சும்மா கதை கட்டிவிட்டிருக்கினம்". ராசலிங்கத்தின் வார்த்தைகள் மன்றாட்டமாக வெளிவந்தன.

"சரி சரி பாப்பா அழாதை; நாங்கள் உண்டை அண்ணையை ஒண்டும் பண்ணமாட்டம்.... உங்களில் யாராவது இனிமேல் அகிலனை எங்கேயாவது கண்டா உடனை எங்களிட்டை வந்து சொல்லிப் போட வேணும்" என்றவன், ராசலிங்கத்தைப் பார்த்து " உன் பெயரென்ன " என்றான். ராசலிங்கம் தன்பெயரைச் சொல்லவே, " ராசலிங்கம் " என்று தன் வாய்க்குள் முணுமுணுத்தபடி, 'முன்னமே கேள்விப்பட்டிருக்கிறேன்' என்பதுபோல் தலையை ஆட்டினான்.
"இன்னொருமுறை உங்களைப் பத்தி புகார் வந்துதெண்டா குடும்பத்தோட கொளுத்திப் போடுவம்" என்று உறுமிய இராணுவத் தலைவன், சுற்றுமுற்றும் நின்றிருந்த ஏனையவர்களையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து போனான்.
அயல் வீட்டு நாய்களின் குரைப்பு அடங்கியபோதுதான் அந்த வீட்டில் நின்று போயிருந்த இதயங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கின. ■

## புங்குடு தீவில் சிக்குண்டோரில் 7சத வீதமானோர் மரணம்

■ மதகுரு தகவல்

புங்குடு தீவுப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்த கடந்த ஒரு வருடகாலத்தில், அங்கு இராணுவத்தினரிடம் சிக்குண்டவர்களில் ஏழுசதவீதமானோர் மரணம் அடைந்துவிட்டனர்.

இவர்கள் அனேகமாக போதிய வைத்திய வசதி, குடும்பங்களைப் பிரிந்ததால் ஏற்பட்ட உளவியல் தாக்கம், சமூகத்துடன் சேர்ந்தில்லாத தனித்த வாழ்க்கை, விருப்பமான உணவு வகைகளைப் பெறமுடியாமை, படையினர் பற்றிய பயம் என்பவையே இந்த மரணங்களுக்கு முக்கிய காரணங்களாக இருக்கவேண்டும் என நம்பப்படுகிறது.

புங்குடு தீவுப்பகுதியில் பாம்புகள் பெருகிவிட்டன. அதனால் பலர் பாம்புக்கடிக்கும் ஆளாகினர். எனினும் அதற்குப் போதிய வைத்திய வசதிகள் இல்லை.

புங்குடுதீவில் தேங்காய்கள் மேலதிகமாக உள்ளன. அதனால் தேங்காய்களைக் கொப்பராவாக்கி எண்ணெய் வடித்து நயினாதீவு, அனலை தீவு போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்போரும் உளர்.
இந்தத் தகவலை புங்குடுதீவில் இருந்து வந்த மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருட காலமாக அவர் புங்குடுதீவுப் பகுதியில் தங்கியிருந்துவிட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார். அவர் அங்குள்ள நிலைமை குறித்து தகவல் தருகையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவருடத்திற்கு முன்னர் புங்குடு தீவுப்பகுதியை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோது சுமார் 680 பேர் அங்கு இருந்தனர். அவர்களில் சுமார் ஐம்பது பேர்வரை இதுவரை இறந்துவிட்டனர்.

அனேகமாக மேலே கூறப்பட்ட பாதிப்புகளே மரணங்களுக்கு காரணங்கள் எனச் சொல்லப்படுகிறது.

**இடமின்மை காரணமாக "ஓர் நாட்டின் ஈர் தேசிய வாதங்கள்", "கொழும்பில் தத்துக்கள் மிகுந்த பத்திரிகைத் தொழில்" ஆகிய கட்டுரைகள் அடுத்த களத்தில் பிரசுரமாகும். ஆ-ர்**